**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC –161/2025 (/20) |
| Deposition of witness for | Prosecution : LW 1 – PW 1 |
| | Defence : |
| | Court : |
| Name : அய்யப்பன் | Father's Name: ஆறுமுகம் |
| | Husband Name: |
| Village/Town : திருவண்ணாமலை | Taluk : |
| | Calling : தலைமைக்காவலர் |
| | Age : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025ம் தேதியன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் நானும், உதவி ஆய்வாளர் கணேசன் மற்றும் பெண் தலைமைக் காவலர் 653 திருமதி. சுமித்ரா ஆகிய மூவரும் ரோந்துப்பணியில் ஈடுபட்டோம். அப்போது நாங்கள் ரோந்தில் சோமாசிப்பாடி, கீழ்பென்னாத்தூர் வழியாக வழுதலங்குணம் சென்றோம். அப்போது கோகிலா, த/பெ. குப்பன் என்பவர் அவரது வீட்டிற்கு முன்புறத்தில் சென்ற போது ஒரு பையில் வைத்து பொருளை விற்பனை செய்துக்கொண்டிருந்தார்கள். எங்களைப் பார்த்தவுடன் மேற்படி கோகிலா ஓடச்சென்றார்கள். அப்போது பெண் காவலர் சுமித்ரா அவர்கள் எதிரியை மடக்கிபிடித்தார்கள் (சாட்சி ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார்). மேற்படி எதிரி வைத்திருந்த பையை நாங்கள் சோதனை செய்த போது அதில் old chef Brandy 10 பாட்டில்களும், Mcline Brandy 16 பாட்டில்களும், SNJ No.1 Brandy–1 பாட்டிலும் மொத்தம் 27 பாட்டில்கள் இருந்தது.

27 பிராந்தி பாட்டில்களும் 180 ML கொள்ளளவு கொண்டது. பின்னர் எதிரியின் பெயர், முகவரியை விசாரித்தார். அவருடைய பெயர் கோகிலா, த/பெ. குப்பன் என்றும், எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் கணேசன் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அதில் நானும், பெண் தலைமைக் காவலர் சுமித்ரா என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். எதிரியும் அதில் கையொப்பம் செய்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். எதிரியிடம் இருந்து 27 பிராந்தி பாட்டில்களை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் அதில் நானும், பெண் தலைமைக் காவலர் சுமித்ரா ஆகிய இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எதிரியிடம் இருந்து கைப்பற்றிய 27 பிராந்தி பாட்டில்களை தற்போது பார்த்தால் அடையாளம் காட்டுவேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 27 பிராந்தி பாட்டில்கள் **அ.சா.பொ.1** ஆகும். அதன் பிறகு கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுடன் எதிரியை திருவண்ணாமலை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையம் அழைத்து வந்து உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.01/2025, ச/பி. 4(1)(i), 4(1)(A) TNP Amendment Act–ன் படி வழக்கு பதிவுசெய்தார். எதிரியை பெண் காவலர் மூலம் திரேக சோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

மேற்படி எதன் அடிப்படையில் நாங்கள் மூவரும் ரோந்துப்பணிக்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசியத்தகவல் மூலம் சென்றோம். மேற்படி தகவல் வாய்மொழித்தகவலா எழுத்துப்பூர்மான தகவலா

என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு நாங்கள் கிளம்பினோம் என்றால் பகல் 12.30 மணிக்கு புறப்பட்டோம். மேற்படி மூவருமே எவ்வாறு சென்றோம் என்றால் மூவரும் அவர் அவர் இருசக்கர வாகனத்தில் சென்றோம். மேற்படி திருவண்ணாமலையில் இருந்து வழுதலங்குணம் அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சென்றுவிடலாம் நாங்கள் கண்காணிப்பு செய்துக்கொண்டே சென்றதால் நேரம் கூடியது. சம்பவயிடம் நடந்த இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் உதவி ஆய்வாளர் சாட்சியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் உதவி ஆய்வாளர் விசாரணை செய்ய முற்பட்டார் ஆனால் யாரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. மேற்படி சம்பவயிடத்தில் ஒரு நபர் இருந்தார் என்றும் அவர் எங்களைப் பார்த்தவுடன் ஓடிவிட்டார் என்று சொல்லப்பட்ட நிலையில் அவர் யார் என்ற உதவி ஆய்வாளர் விசாரணை செய்தாரா என்றால் இல்லை. எதிரியானவர் எந்த காலத்திலேயும் மதுபாட்டில்களை விற்பனை செய்யவில்லை என்றாலும், இது ஒரு சோடிக்கப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் மேற்படி சம்பவயிடத்தில் பார்வைமகசர் மாதிரிவரைபடம் ஏதும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவயிடம் எதிரியின் வீட்டின் அருகில் என்று சொல்லப்பட்டுள்ளது குறிப்பாக திசைகள் ஏதும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்ட பாட்டில்களை பையில் வைத்திருந்தார் என்று சொல்லியுள்ளோம் அந்த பை ஏதும் இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 180 ML கொள்ளளவு கொண்ட கைப்பற்றப்பட்ட பாட்டில்களை அளவுகள் மூலம் ஏதும் அளவு செய்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்ட சொத்துக்களில் உள்ளது மேற்சொன்னது மதுதான் என்பதை ரசாயன பகுப்பாய்வுக்கு ஏதேனும் அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது.

மேற்படி எதிரியிடம் யார் பாட்டில்களை வாங்க வந்தார் என்றோ, பணம் வைத்திருந்தார் என்றோ உதவி ஆய்வாளர் யாரையாவது விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்யவில்லை. மேற்படி மேல் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாட்டில்கள் அனைத்துமே அரசுமதுபானக் கடைகளில் கிடைக்கும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் எதும் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உதவி ஆய்வாளரான கணேசன் என்பவருக்கு கீழ்பணிபுரிந்துவரும் நபர்கள் தான் நானும் சுமித்ரா என்றால் சரிதான். மேற்படி உதவி ஆய்வாளருக்கு பவ்வியப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**